இனியும் இந்தக் கெடுதி நிலையை சகிக்க முடியாது என்ற இக்கட்டுக்கு உள்ளாகியிருக்கும் தென்னிலங்கை மக்கள் தமது புளுக்கத்தை, எரிச்சலை, விசனத்தைத் தெரிவிப்பதற்காக எதிர்வரும் பத்தாம் திகதி நாடளாவிய ரீதியில் பொது வேலைநிறுத்தம் ஒன்றுக்கும் அழைப்பு விடுத்திருக்கின்றனர்.

இதனால் கலக்கமடைந்த அரசுத் தலைமை வழமை போல இந்த விவகாரத்தைச் சமாளிக்கவும் 'யுத்தம்' என்ற விவகாரத்தை முன்னிறுத்தி இருக்கின்றது.

மேற்படி நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்படவிருக்கும் வேலை நிறுத்தம் அரசின் யுத்த வெற்றிகளைச் சின்னாபின்னமாக்கிச் சிதறடித்துவிடும். அப்படி யுத்த வெற்றியைச் சிதறடித்து, நாட்டில் ஸ்திரமற்ற நிலையை உருவாக்கும் அரசியல் பின்னணியுடனேயே இந்த வேலை நிறுத்தப் போராட்டச் சதி சில தரப்புகளினால் பின்னப்படுகின்றது என்று அரசுத் தலைமை வழமை போல குற்றம் சுமத்தியிருக்கின்றது.

நூற்றுக்கும் அதிகமான தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து முன்னெடுக்கும் இந்த வேலை நிறுத்தப் போராட்டம் அரசின் அரசியல் இருப்புக்கே சவால் விடும் ஒரு முக்கிய விவகாரமாகும்.

அதை அரசியல் ரீதியாக எதிர்கொள்ளத் திராணியற்ற கொழும்பு அரசு, மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவது போல அரசின் யுத்தவெற்றிகளைச் சிதறடிக்கவே வேலை நிறுத்தப்போராட்டச் சதி என்று கதையை அவிழ்த்து விட்டிருக்கின்றது.

தமிழர் தாயகம் மீதான கொடூரப் போரை ரசித்துச் சுவைக்கும் - நற்செய்தியாகக் கருதுகின்ற- தென்னிலங்கையில் இந்தக் கதை நன்றாக எடுபடும் என்பது உறுதி.

தமிழருக்கு எதிரான யுத்தத்தில் வெல்வதாயின் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதிக்காமல் அரசுக்கு ஒத்துழைக்க வேண்டும் என்று அரசுத் தரப்பில் விடப்படும் கதைக்கு வழமைபோல முட்டாள் தனமாக தென்னிலங்கை எடுபடுமா என்பது ஜூலை 10 ஆம் திகதி - அடுத்த வியாழக்கிழமை - தெரியவந்து விடும்.

# பொலன்னறுவையில் ஆயுதக் குழுக்களின் 19 முகாம்கள்; மாகாணசபை தேர்தல் மோசடிக்கு முனனேற்பாடு

## ஐ.தே.கட்சி திடுக்கிடும் தகவல்

மாகாணசபைத் தேர்தலில் அரச பயங்கரவாதத்தின் ஊடாக வெற்றி பெறும் நோக்கில் அரசாங்கத்தின் ஆதரவுடன் பொலன்னறுவை எக்கட பத்துவ என்ற இடத்தில் ஆயுதக்குழுக்களின் 19 முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சி தலைவரின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அக்கட்சியின் பொதுச் செயலாளரும் எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்கவே இத் தகவலைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:- வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக நாம் இப்போது கேகாலை, இரத்தினபுரி மற்றும் பொல னறுவை ஆகிய மாவட்டங்களில் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய் துள்ளோம்.

வேட்பு மனுதாக்கல் செய்யும் இறுதித் தினத்தன்று வெள்ளியன்று (இன்று) நாம் அநுராதபுர மாவட்டத்திற்கான வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்வோம். இந்தத் தேர்தல் நீதியாகவும் நேர்மையாகவும் நடைபெறும் என்ற நம்பிக்கை எமக்கில்லை. கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் மோசடிகள் மூலம் வெற்றிபெற்றமை போல் இந்த் தேர்தலிலும் அரச பயங்கரவாதத்தைப் பயன்படுத்தி மோசடிகள் மூலம் வெற்றிபெற அரச திட்டமிட்டுள்ளது.

பொலன்னறுவை எக்கடபத்துவ என்ற இடத்தில் ஆயுதக் குழுக்களின் 19 முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன என்று எமக்குத் தகவல் கிடைத்துள்ளது.

ஆயுதக் குழுக்கள் ஊடாக தேர்தல் மோசடியில் ஈடுபடுவதற் காகவே இந்த முகாம்கள் அமைக்கப் பட்டுள்ளன. இந்த மாதிரியான மோசடி கள் இடம்பெறுவதை நாம் அனுமதிக்கப் போவதில்லை. அனைத்துக்கட்சிகளும் ஒன்றிணைந்து இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவேண்டும். அரசின் இந்த திட்டம் தொடர்பாக நாம் தேர்தல் ஆணையாளரிடம் இன் னும் ஓரிரு நாள்களில் முறைப்பாடு செய் யத் திட்டமிட்டுள்ளோம்.- என்றார். (அ-உ)

# காட்டாமணக்கு விதையிலிருந்து மூலிகை டீசல் தயாரிக்க முயற்சி

## தென்னிலங்கை நிறுவனத்தின் முன்னோடி நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 5

எரிபொருள் தட்டுப்பாட்டை ஓரளவுக்கு நிவர்த்தி செய்யும் வகையில் காட்டாமணக்கு (Jatropha) செடியிலிருந்து எரிபொருள் தயாரிக்கும் முயற்சியில் இலங்கை நிறுவனம் ஒன்று ஈடுபடவிருக்கின்றது.

'வின்ரன் பயோ' டீசல் தனியார் நிறுவனம் இந்த முயற்சியில் ஈடுபடும் நோக்கத்தில் சில முன்னோடிச் செயற்பாடுகளை மேற்கொண்டிருப்பது தெரியவந்துள்ளது.

மகியங்கனை பிரதேசத்தில் முதன் முறையாக 100 ஏக்கர் நிலத்தில் காட்டமணக்கை பயிர் செய்வதென்றும் இதிலிருந்து மூலிகை எரிபொருளை (டீசல்) தயாரிக்க முடியும் என்றும் மேற்படி நிறுவனத்தின் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். அமெரிக்கா, இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளில் இந்த முயற்சி வெற்றியளித்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

காட்டாமணக்கு செடியில் உற்பத்தியாகும் காய்களிலிருந்து 37 வீதம் எண்ணெய் பெறமுடியும் என்றும் இவ்வெண்ணெய்யை மூலிகை டீசலாக மாற்றி பயன்படுத்தமுடியும் என்றும் அப்பிரமுகர் மேலும் தெரிவித்துள்ளார்.

மூன்று கிலோ காட்டாமணக்கிலிருந்து ஒரு லீற்றர் டீசல் தயாரிக்க முடியும். 2010 ஆவது ஆண்டளவில் இத் திட்டத்தை செயலபடுத்த இந்த நிறுவனம் முடிவு செய்துள்ளது. வருடத்தில் 250,000 லீற்றர் மூலிகை டீசல் உற்பத்தி செய்ய முடியும் என்று அந்நிறுவனம் கருதுகின்றது. (ப)

# தமிழக மீனவரின் 600 விசைப்படகுகளை கைப்பற்றிய கடற்படை பின்னர் விடுவித்தது

கொழும்பு, ஜூலை 5

இலங்கைக் கடற்பரப்பில் கடந்த புதன்கிழமை மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தமிழக மீனவர்களின் 600 விசைப் படகுகள் இலங்கைக் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளன.

இந்தப் படகுகள் விடத்தல்தீவை நோக்கிச் சென்று கொண்டிருந்த போது நெடுந்தீவுக்கும் மன்னாருக்கும் இடைப்பட்ட பகுதியில் வைத்து கடற்படையினரால் சுற்றி வளைத்துப் பிடிக்கப்பட்டன என்று இலங்கைக் கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் டி.கே.பி.தஸநாயக்கா கூறினார்.

தலைமன்னார் கட்ற்கரைக்கு 2 கிலோ மீற்றர் தொலைவில் வைத்து கடுமையாக சோதிக்கப்பட்ட பின்னர் விசைப்படகுகளுடன் மீனவர்களும் விடுவிக்கப்பட்டனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-02)

## அரச கருமமொழித் திணைக்களத்தின்

# சாரதி பதவிக்கான பரீட்சை கொழும்பில் யாழ்.மவட்டப் பரீட்சார்த்திகள் பாதிப்பு

அரசகரும மொழிகள் திணைக்களத்தின் சாரதி பதவிக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 12 ஆம் திகதி கொழும்பில் மட்டும் நடத்தப்படவுள்ளது. தற்போதைய நெருக்கடியான சூழ் நிலையில் யாழ். மாவட்ட பரீட்சார்த்திகள் பலர் இப் பரீட்சையில் தோற்ற முடியாத சூழ் நிலை ஏற்பட்டுள்ளதாகக் கவலை வெளியிடுகின்றனர்.

இப் பதவிக்கு யாழ். மாவட்டத்தில் இருந்து பெரும் எண்ணிக்கையானோர் விண்ணப்பித்துள்ளனர். கொழும்பில் நடைபெறவுள்ள இப் பரீட்சையில் தோற்றுவதில் இங்குள்ள பரீட்சார்த்திகள் பல்வேறு நெருக்கடிகளை எதிர் நோக்குவதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர். குறிப்பாக நிதி, போக்குவரத்து, பாதுகாப்பு, தங்குமிட வசதி போன்ற நெருக்கடிகளை எதிர்கொள்வதாகத் தெரிவித்தனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் யாழ். மாவட்ட பரீட்சார்த்திகளின் நிலையைக் கருத்தில் கொண்டு மேற்படி பரீட்சையையும் இங்கேயே நடத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (202)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூலை5

வட்டுக்கோட்டை விசாலாட்சி சமேத விஸ்வநாதப் பெருமாள் (வட்டுச் சிவன்) ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவில் நாளை மறுதினம் சப்பரத் திருவிழாவில் விசேட பூசைகள், சமய நிகழ்வு களும் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் புதனன்று தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். அன்று காலையில் விசேட நடேசர் அபிசேகமும் திருநடனமும் ஆனி உத்தர தரிசனமும் இடம்பெறும்.

மேற்படி ஆலய வருடாந்தப் பெருந் திருவிழா 12 ஆம் நாள் பூங்காவனத் துடன் நிறைவு பெறும். (அ)

# சிபார்சு செய்யப்பட்ட பாவனையாளர்களுக்கு நிர்ணய விலையில் சிமெந்து விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூலை 5

யாழ்.மாவட்டத்தில் சிபார்சு செய்யப்பட்ட பாவனை யாளர்களுக்கு நிர்ணய விலையில் சிமெந்து விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள் ளது என லங்கா சிமெந்து நிறுவன தலைமைக் கணக்காளர் தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அறிவுறுத்தலுக்கு இணங்க லங்கா சிமெந்து நிறுவனத் தலைவர் சிசிர பரணகமவின் முயற்சியின் பயனாக சிமெந்து விநியோகம் இடம் பெறவுள்ளது.

யாழ். மாவட்ட அரச அதிபர் கே. கணேஷ் சிபார்சு செய்த பாவனையாளர்களுக்கே நிர்ணயம் செய்த விலையில் சிமெந்து விநியோகிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கென ஆயிரத்து 500 மெற்றிக் தொன் சிமெந்து 'யால' கப்பல் மூலம் தருவிக்கப்பட்டு காங்கேசன் துறைமுகத்தில் இறக்கப்படுகின்றது.

பாவனையாளர்கள் இணுவிலில் உள்ள லங்கா சிமெந்துக் கிளை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (202)

## நாளை

| | |
|---|---|
| ஆனி 22 | 06.07.2008 |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | சதுர்த்தி |
| | பி.இ. 02.24 வரை |
| நட்சத்திரம் : | ஆயிலியம் |
| | மு.ப. 10.32 வரை |
| சுபநேரம் : | 08.58 - 10.28 |
| ராகுகாலம் : | 04.28 - 05.58 |

# வாசகர் திருமுகம்

## ப்ரயாண ர்'ககற க்டைக்குமா?

கடந்த மாதம் 2 ஆம் திகதி யாழ்ப்பாணம் வந்து மீண்டும் கொழும்பு செல்வதற்கான இருவழி பிரயாணத்திற்கான ரிக்கற்றை 19,500 ரூபா செலுத்திப் பெற்றேன். அன்றைய தினம் காலநிலை சரியில்லாமையால் கடந்த மாதம் 8 ஆம் திகதியே யாழ்ப்பாணம் வந்தேன்.

இங்கே எனது வேலைகளை முடித்துக் கொண்டு கடந்த மாதம் 20 ஆம் திகதி எக்ஸ்போ காரியாலயம் சென்று ஆசனம் ஒதுக்கித் தருமாறு கேட்டேன். அவர்கள் 24 ஆம் திகதி வரும்படி கூறினார்கள். அன்றைய தினம் போனபோது ஏழாம் மாதம் 4 ஆம் திகதி வரும்படி கூறினார்கள். பலாலி விமான நிலையத்தில் எனக்கு அளிக்கப்பட்ட தங்குமிட அனுமதி 07.07.2008 ஆம் திகதியுடன் முடிவடைவதால் அதற்கு முன் நான் போக வேண்டியதைச் சுட்டிக்காட்டினேன். இடையில் வந்து பார்க்கச் சொன்னார்கள். அதன்படி 02.07.2008 அன்று போனபோது 17 ஆம் திகதிதான் போகலாம் என்றார்கள்.

ஏன் இப்படி இழுத்தடிக்கிறார்கள்? எனது இக்கட்டான நிலை இவர்களுக்கு புரியவில்லையா? கொழும்பில் இருவழிப் பிரயாண ரிக்கற் எடுத்தது குற்றமா? அல்லது இங்கு இருந்து போகிறவர்கள் எல்லோருக்குமே இந்த நிலை தானா?

7 ஆம் திகதிக்கு முன் எனக்கு ஆசன வசதி கிடைக்குமா?

கொழும்பு . (தற்போது யாழ்ப்பாணத்தில்) P.M.H முகைதீன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய ரீதியில் பிரகாசிக்கக் கூடிய கரப்பந்தாட்ட அணி யாழ்.மாவட்டத்தில் வெகுவிரைவில் உருவாக்கப்படும்



யாழ்.மாவட்டத்திற்கென ஒரு சிறந்த கரப்பந்தாட்ட அணிவிரைவில் உருவாக்கப்படும். இந்த அணி திறமை வாய்ந்த வீரர்களைக் கொண்டதாகவும் வலிமை மிக்கதாகவும் உருவாக்கப்பட்டு யாழ்.மாவட்டம் கடந்து தேசிய ரீதியில் திறமையை வெளிப்படுத்த வேண்டும்.

இதற்கு முன்னோடி நடவடிக்கையாக பிரதேச செயலர் பிரிவு ரீதியாக ஆண்களை உருவாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்காக நாம் இப்போது சகல முயற்சிகளை முன்னெடுக்கின்றோம்.

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் தலைவரும் யாழ்.மாவட்ட முன்னாள் விளையாட்டு அலுவலருமான க.ஏகாம்பரம் உதயனுக்கு வழங்கிய செவ்வியில் இதனைத் தெரிவித்தார்.

மேலும் இவர் கூறுகையில்:

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் இந்தாண்டு புதிய நிர்வாகத்தை தெரிவு செய்துள்ளது. பல விடயங்களை முன்னெடுக்க வேண்டும் என்ற தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.




குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் இருந்து கரப்பந்தாட்டத்தில் வீரர்கள், வீராங்கனைகளை உருவாக்க வேண்டும் என்ற இலக்குடன் செயல்திட்டங்களை மேற்கொள்ளவுள்ளோம்.

கடந்த காலத்தில் கரப்பந்தாட்டம் விளையாடிய கழகங்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே காணப்பட்டன. தற்போது இந்நிலையில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள் ளது.

முன்னர் அதிகளவில் 'ஓவர்கேம்' (Over Game) தான் பரவலாக விளையாடப்பட்டு வந்தது. 'செற்றப் கேம்' (Setup Game) மட்டுப்படுத்திய அளவில் கோப்பாய், காங்கேசன்துறை போன்ற இடங்களிலேயே பிரபல்யம் பெற்றுவந்தது.

காலத்தின் தேவை உணர்ந்து இன்று யாழ்.மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் 'செற்றப் கேம்' விளையாடும் கழகங்கள் தோன்றியுள்ளன. பாடசாலைகள் மட்டத்திலும் 'செற்றப் கேம்' போட்டிகள் நடைபெறுகின்றன.

ஆண்கள், பெண்கள் என மாணவர்களும் மிகவும் உற்சாகத்துடன் விளையாடி வருகின்றார்கள். இன்று இப்போட்டியை நல்ல முறையில் பயிற்சிகளை வழங்கி, ஊக்கப்படுத்தி புதிய நுட்பங்களைத் தெரியப்படுத்தி ஏனைய மாவட்ட அணிகளுக்கு சமனாக இங்கு ஒரு அணியை நாம் உருவாக்க வேண்டும்.

யாழ்.மாவட்டத்தில் தரமான ஆண், பெண் கரப்பந்தாட்ட அணிகளை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இதற்கான வீரர்கள், வீராங்கனைகளை தெரிவு செய்வதற்கு கழகங்களுக்கு இடையே போட்டிகளை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

## திறமையான வீரர்களை இனங்காண்பதற்கு பிரதேச செயலர் பிரிவு ரீதியாகப் போட்டிகள்

மாவட்ட மட்டத்தில் உள்ள வீரர்கள், வீராங்கனைகளுக்கான பயிற்சி முகாங்களும் நடத்தப்படவுள்ளன.

இதனைவிட யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்துடன் இணைந்து செயல்படும் கழகங்களுடன் பதிவு செய்யப்படாமல் இருக்கும் பல கழகங்களும் காணப்படுகின்றன. இத்தகைய கழகங்களையும் இனங்கண்டு இணைக்கும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவுள்ளன.

**செவ்வி: நேசன்**

முதற்கட்டமாக பிரதேச மட்டத்தில் பதிவு செய்யப்பட்ட இணைந்த கழகங்களுக்கு இடையே போட்டிகள் நடத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் கனிஷ்ட பிரிவுகளை உருவாக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. வெகு விரைவில் கனிஷ்ட பிரிவினருக்கான தெரிவுக்கு போட்டிகள் பிரதேச செயலகங்கள் மட்டத்தில் நடத்தப்படும்.

இதற்கு முன்னோடியாக பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்திலான பயிற்றுனர்களை சங்கம் நியமிக்கவுள்ளது. இந்தப் பயிற்றுநர்கள் உரிய பயிற்சிகளை பெற்றவர்களாகவும், ஒழுக்கம், பண்புக்கு உட்பட்டவர்களாகவும் காணப்படுவார்கள்.

## கரப்பந்தாட்டச் சங்கத்தின் தலைவர் ஏகாம்பரம் செவ்வி

இன்று பாடசாலைகள் மட்டத்தில் தரமான வீரர்கள், வீராங்கனைகள் உருவாகி வருகின்றார்கள். இவர்கள் கோட்டம்,வலயம், மாவட்டம், மாகாணம், தேசியம் என்ற போட்டி இலக்குகளுடன் விளையாடி இடையில் விளையாட்டை கைவிட்டு செல்கின்ற நிலைமை காணப்படுகின்றது.

இந்த நிலைமை விளையாட்டில் முன்னேற்றத்தை ஏற்படுத்தமாட்டாது. யாழ்.மாவட்டத்தின் பல பகுதிகளிலும் கரப்பந்தாட்டப் போட்டிகள் பரவலாக இடம்பெற்று வருகின்றன.

போட்டிகளை நடத்தும் போது கனிஷ்ட பிரிவினருக்கான போட்டிகளை நடத்த நடவடிக்கையெடுக்கப்பட்டால் பாடசாலை மாணவர்களும் தொடர் விளையாட்டில் ஈடுபட்டுக் கொள்ள வாய்ப்புகள் காணப்படும்.

கரப்பந்தாட்ட சங்கத்துடன் கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கமும் இணைந்து இயக்கி வருகின்றன. புதிய மத்தியஸ்தர்களுக்கான வகுப்புக்களையும் பயிற்சிகளையும் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தற்போது கரப்பந்தாட்டம் போட்டிகளில் மத்தியஸ்தர்களாக கடமையாற்றுபவர்களின் எண்ணிக்கை குறைவாகவே காணப்படுகின்றது. இதனை மாற்றி அமைக்கும் வகையில் புதிய மத்தியஸ்தர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு இணைக்கப்படவுள்ளார்கள்.

தற்போது கரப்பந்தாட்டச்சங்கத்தின் முழு நோக்கமும் ஏனைய மாவட்டங்களுக்கு சமமாக தரமான திறமைமிக்க யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட அணியொன்றை உருவாக்குவதே.

இந்த வகையில் இலை மறைகாயாகவே பல வீரர்கள், வீராங்கனைகள் நகரப்புறத்திலும் கிராமப்புறத்திலும் காணப்படுகின்றார்கள். இவர்களை இனம்கண்டு வெளிக்கொண்டு வரவும் சங்கம் தன்னாலான முழுமையான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

குறிப்பாக கரப்பந்தாட்ட வீர, வீராங்கனைகளுக்கு பொருளாதாரக் கஷ்டம் உண்டு. அதனால் முழுமையாக அவர்கள் விளையாட்டின் பால் கவனத்தை செலுத்த முடியாத துர்ப்பாக்கிய நிலைமையும் காணப்படுகின்றன.

முழுமையாக பொருளாதார உதவிகளை வழங்க முடியாவிட்டாலும் ஒரு சிறு தொகையேனும் வழங்க வேண்டும். போட்டிகளில் வெற்றிபெறும் கழகங்களுக்கு பணப்பரிசும் வழங்கப்பட வேண்டும் என்ற வகையில் கடந்தாண்டும் நாம் நடத்திய சில போட்டிகளுக்கு கிடைத்த பணப்பரிசுகளையும் வழங்கியுள்ளோம்.

இப்போட்டிகளும் பெரியளவில் அனுமதிச் சீட்டுக்கள் மூலம் பணம்பெற்று நடத்தும் போட்டியல்ல. ஆகையினால் நடத்துபவர்களும் அனுசரணையாளர்களும் இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும்.

குறிப்பாக கரப்பந்தாட்டப் போட்டியின் வளர்ச்சிக்கு வர்த்தகர்களும், அனுசரணையாளர்களும் மனப்பூர்வமாக உதவிகளை செய்யவேண்டும்- என்றார்.


சிவமயம்

# வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 04.06.2008 புதன்கிழமை
சிவபதமடைந்த எங்கள் குடும்ப ஒளி விளக்கு

அமரர்

## முருகேசு மங்களேஸ்வரி



அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள்
இன்று (05.07.2008) சனிக்கிழமை மு.ப. 10
மணியளவில் அன்னாரின் இல்லத்தில்
நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள்
குடும்ப சகிதம் வருகை தந்து, ஆத்மசாந்திப்
பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து
நடைபெறும் மதிய போசனத்திலும்
கலந்து கொள்ளுமாறு அன்புடன்
அழைக்கின்றோம்.

சி.கனகசபாபதி, க.அருணகிரிநாதன் (மகன்),
அ.சிறிசிவகுமார் (மருமகன், C.T.B.),
சி .ஜெகதீஸ்வரி (மகள்),
வை. அருளம்மா, சி.பரமேஸ்வரி, கை.சபாநாதன்
(சகோதரர்கள்),
மற்றும் பெறாமக்கள், பேரப்பிள்ளைகள்.

துரை வீதி,
தாவடி வடக்கு,
கொக்குவில்.

(சி/553600)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பல்கலைக்கழக 2007, 2008....

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

6268943-MENAKA JEGATHEESAN, 6297242-SIVANANTHAM PATHMAJA,6270 417-NISHANTHINI NAGARAJAH,6342450-THEIVENDRAM KAJANTHA,6326536-GANE SHAMOORTHY KIRUSANTHAN, 6296939-SIVAKADADCHANYAM SATHIYAN ,6264735-JEBARATNAM ROSHAN NORBERT SAN, 6268870-JEYARAJA CHENTHURI4126068-VIJA YARAGUNATHAN SRIVITHTHAKAN, 5641756 -WEERASURIYA ARACHCHIGE DIL MI NIMANTHIKA,5685303-LANKABARANAGE THARINDU DARSHANA PREMAWA NSA412 6459-PONNAMPALAM SIVAPALAN5726441-SACHITH ARINDHA KALUARACHCHI 482 4440-GODAWE PATHIRANAGE MIHIRAN SIRI LANKA PATHIRANA, 5760208-GINIKANDA YAPA MUDIYANSELAGE CHATHURANGA ILLANGAKOON,5219221-ADHIKARI MUDIYANSELAGE CHATHURANGANI SENEVIRATHNE, 6342477-SUNTHARALI NGAM THEVAKA, 5206405-GARDIYA PUNCHIHEWAGE NIROSHA JEEWANTHI PUNCHIHEWA, 5242932-GUNADAHE DEVAGE MADURANGA NALIN PREMADASA,5260183-AKURANGE PRABATH MADHUSANKA CHANDRAKU MARA,6316140-VELAUTHAPILLAI MEERA, 6344569-MANIVASAN KIRUBAN,5150949-KARASING PATHIRANNAHALAGE ANURADHA RUWANPATHIRANA ,4570910-UNDUPITI KANKANAMGE DON SANJEEWA KUMARA , 6333320-VELUMMYLUM RAMANAN,629 1430-SATHASIVAM PIRATHEEPAN,5134609-SAMARAWEERA JAYAWARDANE HERATH MUDIYANSALAGE ERANGA LOCHANA BANDARA 4753003-HEWA RATHGAMAGE CHANAKA IROSHAN,6270530-VITHTHEYARANEI SIVAKURUNATHAN,4519850-SAPUT HANTHRIGE ROSHAN INDIKA.

6333109-PRINDICKA ARUMUGATHASAN 4506618-DINUSHI CHATHURIKA MUNASINGHE,6339140-RAJARADNAM RAGAVAN, 4561554-S AMARAWICKRAMA LIYANAGE DINUSHA GAYAN WICKRAMA, 4351665-TIRIPITI ACHARIGE SURESH RATHNASE KARA,4309502-EDIPPULI ARACHCHIGE DARSHANA NUWAN JAYARATHNA,4331877-DONA EASHA ANN RATHNAYAKE ,4271548-NIVANTHA SHANAKA DE SILVA,4890183-ELGIRIYA GAMAGE JEEWAN CHATHURANGA,4865308-MADIVILA GAMMACHARIGE CHAMARI PRIYADARSHANI SUNANDA KUMARI,6223443-SANOOJA SHANMUGANATHAN,4968018-KAHENGODA MUDIYANSELAGE DULMINI DILHARI BANDARA,4952340-JAYALATH PEDIGE IRESHA JAYARATHNA,5025435-KALU MANANNALAGE NISHAN BUDDIKA DAYARATHNA, 5504279-YUSHANTHI MADHUKA LEWKEBANDARA,5484286-ANUSHA SANDARENU WEERASINGHEGE, 5519829-RAJAPAKSHA MUDIYANSELAGE JAYASANKA BANDARA RAJAPAKSHA, 5896800-DUNUKARA MUDIYANSELAGE GIHAN ANUSHKA BANDARA,6215084-KANAGASINGAM ANITHTHITHAN,6214592-RAJAMANY JANANTHAN, 6215041-SOUNTHARARASA ARUNAN,6223052-BRUNTHA PUVEENDRAN,5601118-ANHETTIGE WILLIYAM THAKSHILA KUMARI 5603870-EKANAYAKE MUDIYANSELAGE DINESH TIKSHANA EKANAYAKE UDANGAMUWA,6223117-PUVILINY KULATHEV AN,6214550-NAMASIVAYAM NILASHAN, 5417902-WITHANAGE KALPA CHANAKYA PERERA, 5387167-SAMARATHUNGA MUHANDIRAMGE DON THILANKA SHALINDA SAMARATHUNGA, 5400619-WARNAKULASURIYA CONSTAN SURESH HEMANTHA FERNANDO,6212069-SUKIRNA THAVARAJAH,6229077-LOGANATHAN JESLIN,6040985-RATHNAYAKE MUDIYANSELAGE NILAN CHATHURANGA SUGATHAPALA, 5551056-DHARMADASAGE INDIKA PADMA KUMARA,5558670-GAJANAYAKA ARAMBE GEDARA INDIKA DAMITH KUMARA GAJANAYAKA,6004008-BUWALU PATABENDIGE INDIKA PRASANNA DE SILVA, 5859182-GALAP PATHTHIGE PUNSARA DIGASHINI,5873827-HERATH MUDIYANSELAGE MADHAWA SURANJITH DHARMASENA,5858666-RATHNAYAKA MUDIYANSELAGE RUWAN JAYANATH KUMARATHUNGA,6232132-ALAN ROSE SOFY JAKULIN.

## Nursing

6260934-SARAVANAPAVAN DINOJ, 6297331-MANIVANNAN THIRUMAKAL,4778960-RANASINGHE BETHMI ARACHCHIGE THILINI DULANJALIE,4206770-RAVINDU MOHINDRA KURUPPU ARACHCHI,6261710-MAHESWARAN SUBAAGINI,4521200-HENADEERA ARACHCHIGE VISHADHA KALPANIE PERERA, 5664446-MUTHTHA ARACHCHIGE GAYANEE KOUSHALYA KUMARI,6268374-PANCHADCHARAM JANANI,4952286- NADEE RAJIKA DEEPANI JAYATHUNGA,6269761-NISHARA RAJATHURAI,6287220-THURAISINGAM SUTHARSAN ,4424921-UTHPALAANURADHI SAMARASINGHE,6223214-MAATHURI SITHA MPARANATHAN,6216757-SINNARASA KOB INATH.

## Art & Design

5850800-MAHENDRAN SAKTHYAKALA, 5850878-SOMASUNDARAM HANUSHA, 6267734-YOGARAJAH NIROJINI,6267831-JOSEPH CARMEL ,6274595-KUMARASAMY VIJIKA RAN,6274625-PATHMANATHAN VITHUSAN,6285449-GANESHAMOORTHY PRASANNA,6295770-NAGULATHASN JEYATH AS, 6295800-THAVAJOGARASA MAYURATH AN, 6309984-SARMALA SANTHIRATHA SAN, 6313035-SIVARAJAH VIMALATHAS,6313434-MAHATHEVAN RAGUNATHAN,6313728-THURAIRAJAH SUKEETHARAN,6317537-SRIKARARAJAH VAKEESAN,6317618-THURAISINGAM SITHTHARTHAN,6318185-MAHENDRAN THUSHANTHAN,6321275-SELVARAJAH GAJENTHERA,6327419-SHANDIRAN VIJITHARAN,6329381-SIVAGNANAM KAV IMARAN, 6220703-MANOHARAN INTH UNESAN, 6224482-HUMAIRA ABDUL LATH EEP, 6224571-NISHANTHINI RASARATHINAM,6224628-ABUL KALAM RUSLIYA.

## Agriculture

6223419-GEERTHICA THURAIRA JAH, 6257712-SIVAKUMAR SAYANTHIGA,6258042-LOGASIVAM KAJANI,6258093-KANAGARATNAM KEERTHIKA,6260225-SRIHARAN RAGURAJ,6260292-KASIVISVANATHAN YUKAVENTHIRA,6261345-DANIYA EDWARD, 6261728-SWARNA SATGUNAM,6262368-NITHIANANTHAN ARUN,6264174-BAMA VELAUTHAM, 6264379-JOSHEPKUMAR SANGEETHA, 6264930-AMALARATNAM JOY DANISIO US,6264964-UMATHEVA THAYASWARAN,6265006-RAJANAYAGAM RAJRENUSIUS,6265243-THANABALA THANISTAN,6266843-UTHAYARATNAM ARCHANA,6268412-KIRUSHNAPPIRIYA GOPALAKIRUSHNAN,6268420-LINGAGINI SANMUGALINGAM.

6268536-LOG ESWARAN SINTHUREKA,6268650-BRUNTHA RAJARATNAM, 6268749-GOPALA SUTHA NTHIRAN KIRITHIKA, 6268820-SELVARAJAH SRIPRIYA,6269389-ANBARASI SENTHILNESAN,6269699-AJANTHINI SIVANANTHAN,6270140-SRIVARATHAN SUKIRTHA,6270220-KASINATHAR MATHANIGA,6270743-SIVAPATHASUNTHARAM KARUNATHEEPA, 6274200-NAGENDRARASA JANARTHANAN,6277209-KEERTHIGA THANARAJ ,6277616-BANUSHA SUNTHARALINGAM,6287123-KUNARATHTHNAM PIRASATH,6287247-SWAMINATHAN SIVAPPRIYAN,6288286-KANESAPILLAI SUREN,6288316-SELLAIAHYASOTH ARAN, 6291597-ALAGESAN AMIRTHALOJANAN,6291600-SHANMUGANATHAN EHANATHAN,6291619-KULASINGAM KAJAVARNAN,6291678-LOKANATHAN SHANJEEVAN,6291910-SINTHUJA SIVANANTHAM,6291929-THAKSIKA RAMAJEYAM,6297145-MUTHULINGAM LACKSHAGINEY,6297366-KANDASAMY KANCHC HANA,6305580-NADARAJAH SASEETHAN, 6305601-RAMANATHAN GAJATHEEPAN, 6308392-SURIYAKUMARAN SOUTHAMINI, 6310753-BALACHANDRAN VIJITHARAN,6322310-THAVARASA PRATHABAN,6322484-GOPIKEETHA THARM ARATNAM, 6325033-THAVENDRAN JAATHAVAN,6328830-KARTHIKA,SIVALINGAM,6333249-NIVETHIKAVADIV ELU, 6333460-THAVARASA ABIRAMY,6335942-KEERTHTHANA RAJENDRAN,6340253-KAJATHTHIRI SINNARAJAH,6342434-CHAN DRAMOHAN NIROJI,6343775-ARULAN ANTHAM THARSINY,6346227-SELVARAJAH PIRATHEEPAN.

6346243-JAYAKUMARAN POONGUNRAN,6346286-ANANDARAJAH PIRAGALATHAN, 6346332-SRISKANTHARASA RAGUPA RAN,6346847-KIRUPAKARASOORIYAN SURENTHIRA,348033-SELVANANTHAN SUGANJA,6348343-ANANTHARAJAH SUBANGI,6216889-SELVENTHIRAN USHANI 6246 150-THEVASAGAYAM MEDONASAINTHINI,6246290-LOGESWARAN THADSAJINI,6228984-RAJASINGAM MARY FATIMA,6249329-SEEVARATNAM KEMATHARSINY,6237118-RAMASAMY GAJENTHIRAV, 6242774-SINGARAJA THARJINY,6243967-NADARAJAH SANK AR, 6214185-PATHMANATHAN MUGUNTHAN , 621 4703-SOORIAKUMAR SINTHU,6214797-NA DARAJAH JEYANTHAN,6222927-USHALINI MAHALINGAM.

## Siddha medicine

4119312-KRISHNATHASAN KEERTHANA,4142748-FATHIMA SABREENA MOHAMED SANOOB ,4142756-HISHMA HYDER ALY,5 613647-SABARATHINAM DHARSHINI, 5744164-VAIRAWANATHAN THIRIPURA SUNDARI ,5847974-RAGAVAN SIVARANJANI, 6257771-VIJAYAKUMAR SOWTHINI,6258107-PERINPALINGAM JEEVAKI,6258115-SIVARAJAH SINTHUJA, 6259707-ARULRAJAH MARINO SUGEENTHIRAN,6259740-SIVANANTHAN NIROSHAN,6259839-SATHIYAMOORTHY SARUJAN,6262830-YOGARAJAH VASEEGARAN,6265057-ANTONY SAHAYARAJ JOSEPH DINESH,6265294-ANTHONIPILLAI ROYSHAN DEENKUMAR,6268323-ABIRAMY THURAIRAJAH,6268544-SINTHUYA SATHIYABAL AN, 6268 579-THUSHYANTHY AMBIKAIBALAN, 6268609-AARENI SIVABALASUNDARAM, 6268706-THILLAINATHAN JANANI,6269818-SHALINI NADARAJAH,6270255-VINAYAKASIVAM SHYAMALA,6270565-ARJANA SELLATHURAI,6270697-NADARAJAH DARSHINY, 6270891- THUSIYA KUMARASAMI ,6274188-PACKIYARAJA AMBIGAIBALAN,6277195-JEVOJANA MAHENDRAN,6277276-PARMIA KARUNANANTHASOTHY,6277802-SINTHUJA KANAGARAJAH,6286712-THAVARAJAH JANAN THAN,6288278-JEYAPALAN SUJEEV AN, 6297170-RAJATHURAI THEEPANA, 6297374-PARARAJASEKARAM AUVAI,6305911- SELVARAJAH,6309780-VETHANAYAGAM SIVALATHAJIN,6310729-KANAGASABAI KOKILAN,6325122-JAYANI SENTHINAT HAN,6328717-LOGANATHAN SUTHAJAN ANI,6333516-GOGILA THANGAVADIVEL,6333532-ABILASINI KRISHNAR,6336558-KAMALAKKANNAN RAHAVAN,6340296-RATHEEPA THIRUNAMAM, 6346197-VETHANAYAGAM JOH NMARY,6223222-NITHYAPRIYA SANGA RANARAYANASARMA,6186041-SUBBOTHINI NAGARAJAH,6154824-THUSHYANTHINI KANAGARETNAM,6087060-ANGELLA NISHANI DEVANAYAGAM,6088961-VEERAWAGHU MYTHIRA,6089534-SELVANAYAGAM NISHANTHINI

## MLS

6291961-NADARAJASUNDARAM VAANI, 6287182-SRIPATHY SRIJEYABHAVAN, 6162541-VIVEKANANDARAJAH VIJAYAMYOOTHINI,6214096-FRANCIS JAYASEELAN MARK MITHULAN ,6232167,MANOHARAN KALAIV ANI, 62 46060 MANIKKAVASAGAR ARUNINY,6241808-KANDASAMY SUMATHA. (முற்றும்)

# மாவட்ட தமிழ்த்தினப் போட்டியின் அரங்க நிகழ்வுகள் நாளை

வலி.வடக்கு, ஜூலை5

மாவட்ட மட்ட தமிழ் மொழித்தினப் போட்டிகளான நாடகம் திறந்த போட்டி, வில்லுப்பாட்டு திறந்தபோட்டி, பிரிவு 4, இசை தனி ஆகிய போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளன.

நாடகப் போட்டியில் பங்குபற்றும் பாடசாலைகள் அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட நாடகப் பிரதி ஒன்றினை நாடகப் போட்டி நடைபெறும் தினம் போட்டி செயலாளரிடம் கையளிக்கும்படியும் -

போட்டியில் கலந்துகொள்பவர்கள் தம்மை அடையாள அட்டை மூலம் உறுதிப்படுத்த வேண்டும் எனவும் -

போட்டியில் கலந்துகொள்ளும் மாணவ, மாணவிகள் பொறுப்பாசிரியருடன் வர வேண்டும் எனவும் - அறிவுறுத்தப்பட்டுள்ளது.

போட்டியில் கலந்துகொள்ளும் அனைத்துப் பாடசாலைகளையும் உரிய நேரத்தில் சமுகமளித்து ஒத்துழைக்கும் படியும் வேண்டப்பட்டுள்ளது. (1-86)

## முன்பள்ளிகளின் விளையாட்டு விழா

வலி வடக்கு, ஜூலை 5

சுன்னாகம் ஐயனார் சனசமூக நிலைய முன்பள்ளி வருடாந்த விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 1மணிக்கு நிலையத்தலைவர் தலைமையில் முன்பள்ளி விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வலி.தெற்கு உடுவில் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் அ.சோதிநாதனும் சிறப்பு விருந்தினர்களாக அதிபர்களான பொ.கணேஸ்வரலிங்கம், கு.ரவீந்திரன், விளையாட்டு அலுவலர் செல்வி ம.சின்னத்தம்பி, உடுவில் முன்பள்ளி இணைப்பாளர் செல்வி பு.லோகேஸ்வரன், சுன்னாகம் ப.நோ.கூ. சங்கத் தலைவர் சி.குமாரவேலு ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (11-86)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 5

புன்னாலைக்கட்டுவன் தெற்கு கணேசா முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு முன்பள்ளி முன்றிலில் இடம் பெறவுள்ளது.

கணேசா சனசமூக நிலையத் தலைவர் க.செல்லப்பா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலி.தெற்கு சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி மலர் மகள் தயாபரன் கலந்து கொள்வார். (01)

## வீடமைப்பு கொடுப்பனவு

வடக்கு, கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணிப்பு திட்ட நிறுவனத்தினர் தென்மராட்சி பிரதேசத்தில் மேற்கொண்டுவரும் வீடமைப்புத்திட்டத்தின் பயனாளிகளில் ஒரு தொகுதியினருக்கு இரண்டாம் கட்டக் கொடுப்பனவை வழங்கியுள்ளனர்.

பிரதேசத்தில் மேற்கொண்டுவரும் 640 வீடமைப்புத் திட்டத்தில் குறிப்பிட்ட வேலைத் திட்டங்களை பூர்த்திசெய்த 180 பயனாளிகளுக்கு இரண்டாம் கட்டக் கொடுப்பனவாக தலா 75 ஆயிரம் ரூபா வீதம் சாவகச்சேரி மக்கள்வங்கியினூடாக கடந்த புதன்கிழமை வழங்கப்பட்டது.(202-207)

## தாச்சிப் போட்டி

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் 2008 ஆம் ஆண்டுக்கான போட்டி நிரல் ஒழுங்குகள் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு கோண்டாவில் ஸ்ரீ நாராயணா சனசமூக நிலைய மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள பதிவுசெய்யப்பட்ட கழகங்களின் பிரதி நிதிகளைநிரல் ஒழுங்கில் கலந்து கொள்ளும் படி தலைவர் செ.சண்முகலிங்கம் வேண்டியுள்ளார்.

# நவாலியில் வர்த்தகர் வீட்டில் திருட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 5

நவாலி-வேலக்கைப்பிள்ளையார் ஆலய வீதியில் வைரவர் கோயிலுக்கு அண்மையில் நேற்றுமுன்தினம் இரவு 2 மணியளவில் திருட்டு இடம் பெற்றுள்ளது.

25 பேர் கொண்ட கோஷ்டி வீடு உடைத்து பொருள்களைச் சூறையாடியுள்ளது.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு 2மணியளவில் வாகனத்தில் வந்த திருடர்கள் மானிப்பாயில் உள்ள பிரபல வர்த்தகர் ஒருவரின் வீட்டு முகப்பு கதவினை உடைத்து உள்ளே புகுந்து வீட்டில் உள்ள 42பவுண் நகைகள், தள பாடங்கள், காசு என்பவற்றை அபகரித்துச் சென்றனர்.இது தொடர்பாக மானிப்பாய் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (1-95-25)


ஃபக்ஸ் வசதி

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் பக்ஸ் வசதியுடன் கூடிய தொலைத்தொடர்புகளுக்கு தொடர்புகொள்ளவும்

கணபதி தொலைத் தொடர்பகம்,
கச்சாய் வீதி, சாவகச்சேரி.
தொ.பே.இல. 0214590020, 0214590738


# மரண அறிவித்தல்கள்

## திருமதி கிருஷ்ணன் சின்னக்குட்டி

யாழ்ப்பாணம், கரவெட்டி மேற்கை பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிருஷ்ணன் சின்னக்குட்டி நேற்று (04.07.2008) வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் அமரர்களான திரு.திருமதி அப்பாக்குட்டியின் அன்பு மகளும், அமரர் முருகன் கிருஷ்ணனின் அன்பு மனைவியும், அமரர்களான திரு.திருமதி முருகனின் அன்பு மருமகளும், கணேசமூர்த்தி (சமுர்த்தி முகாமையாளர் மாவட்ட செயலகம், மட்டக்களப்பு), Dr.சிவராமன் (தேசிய வைத்தியசாலை, கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயும், காத்யாயனி, அன்பு சுலோஜினி ஆகியாரின் அன்பு மாமியும், சாருகேசன், சிவதுர்க்கா, சிவவராகி ஆகியோரின் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக இன்று (05.07.2008) சனிக்கிழமை காலை மகிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு பிற்பகல் ஒருமணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று தெகிவளை நெடிமாலை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

No:-18 2/2, 37th Lane,
Wellawatta.

தகவல்:
K.கணேசமூர்த்தி,
Dr.K.சிவராமன்.

## திருமதி நற்குணசிங்கம் றோசம்மா



இல .100, சேர் பொன்.இராமநாதன் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நற்குணசிங்கம் றோசம்மா கடந்த 28.06.2008 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் நற்குணசிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - சிந்தாமணி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அப்பச்சி - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் குணதாசன், யோகராஜா, யோகராணி, குகதாசன், ஜெயகௌரி, நிரூபா ஆகியோரின் பாசமிகு தாயும் ரஜனி, உமாமதி, ராஜமோகன், விஜிதா, ஜீவகுமார், சுதர்சன் ஆகியோரின் அன்பு மாமியும் பிரசன்னா, அபிதா, அஸ்மிதா, ஆகாஷ், கிரிசாந், ஜனுசா, சர்ணி, சரண், நிவிசா, கன்சிகா, ராகுல், ராகவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான தம்பிராசா, சின்னத்தம்பி மற்றும் நடேசு, தங்கச்சியம்மா, செல்லத்துரை, தம்பித்துரை, இரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கந்தையா, செல்லையா, காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் இராசரத்தினம், கோபாலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(06.07.2008)ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத் துக்கு எடுக்குச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.100, சேர் பொன்.*
*இராமநாதன் வீதி,*
*கலட்டி, யாழ்ப்பாணம்.*

தகவல்:
அ.நற்குணசிங்கம் (கணவர்),
பிள்ளைகள், மருமக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்ப்பாணம்

## பிரேமதாஸ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யின் வீட்டில் பணிபுரிந்த ஒருவரே என்றும் சம்பவம் இடம்பெற்ற அன்று மோட்டார் சைக்கிளில் வந்த சந்தேகநபர் கிராண்ட்பாஸில் மே தினப் பேரணியில் வந்துகொண்டிருந்த ஜனாதிபதியின் வாகனத்தின் மீது பாய்ந்து தற்கொலை தாக்குதலை நடத்தினார் என்றும் அப்போது நடைபெற்ற பொலிஸ் விசாரணைகள் தெரிவித்திருந்தன.

இச் சம்பவத்தில் தற்கொலைத் தாக்குதலில் ஈடுபட்டவர் என்று கருதப்படும் சந்தேகநபரான பாபு என்பவரின் தந்தையே கொழும்பில் வெள்ளை வானில் கடத்தப்பட்டுள்ளார். ரம்புக்கனவில் உள்ள கோயிலொன்றின் பூசாரியாகிய இவருக்கு வயது 70.

பொலிஸ் அதிகாரிகள் என்று தம்மை அடையாளம் காட்டி இந்த முதியவர் கடத்தப்பட்டுள்ளார் என்றும் இவரை விடுதலை செய்வதற்காக இரண்டு பொலிஸ் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸ் பேச்சாளர் ரஞ்சித் குணசேகர தெரிவித்துள்ளார். (அ-சி)

## யாழ்.மருத்துவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரைகள் ஜூன் 16ஆம் திகதி தொடக்கம் நிறுத்தப்பட்டிருப்பதாகவும் இரண்டாம் வருட மாணவர்களுக்கான சில பரீட்சைகளும் மற்றும் மூன்றாம் வருட மாணவர்களுக்கான விரிவுரைகள் மற்றும் செய்முறை வகுப்புகள் என்பனவும் உத்தி யோகபூர்வ முன்னறிவித்தல் இன்றிக் காலவரையற்ற வகையில் நிறுத்தப்பட் டுள்ளதாகவும் மருத்துவ மாணவர் ஒன்றியம் இப்போது அறிவித்திருக்கிறது.

மூன்றுவாரங்களாக இந்நிலை தொடர்ந்தபோதிலும், கற்றல் மற்றும் கல்விசார் நடவடிக்கைகள் மீள ஆரம்பிபதற்குரிய அறிகுறிகள் எதுவும் தென்படாத நிலையில், பகிஷ்கரிப்பு ஒன்றை முன்னெடுக்கும் நிலைக்கு மாணவர்கள் தள்ளப்பட்டுள்ளதாக மாணவர் ஒன்றியம் நேற்று விடுத்த பத்திரிகை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

உரிய நடவடிக்கைகளை கூடிய விரைவில் எடுத்து மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் இடையூறுகள் எதுவுமின்றி தொடர்வதற்காக மருத்துவ பீட நிர்வாகத்தின் மீது அழுத்தத்தைக் கொடுக்கும் வகையில் மருத்துவபீட மாணவர்கள் பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்து, தங்களது எஞ்சிய கற்றல் மற்றும் கல்விசார் நடவடிக்கைகளை நிறுத்தி பகிஷ்கரிப் பில் ஈடுபட்டுள்ளனர்.

**மாணவர்களால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் வருமாறு**

* தொடர்ந்து வரும் காலங்களில் இறுதி வருட கற்கைநெறிகள் இடையூறு எதுவுமின்றி கொண்டு நடத்தப்பட வேண்டும்.
* இரண்டாம் வருட மாணவர்களின் பரீட்சைகள் யாவும் உரிய காலக்கிரமத்தில் நடத்தப்படவேண்டும்.
* மூன்றாம் வருட கற்கை நெறிக்கான சில பாடநெறிகள் தகுந்த முறையில் முன்னெடுக்கப்பட வேண்டும்.
* இய்ன்றவரை இப்போது நிலவு கின்ற எமது பீடத்திற்கான விரிவுரையாளர் வெற்றிடங்கள் விரைவான முறையில் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.- என்று ஒன்றியம் தனது பத்திரிகை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

(அ-01)

## மன்னார் முன்னர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளது.

இச்சமர் சுமார் 6 மணித்தியாலங்கள் வரை இடம்பெற்றிருக்கின்றது.

இச்சமர் தொடர்பாக விடுதலைப் புலிகளின் இராணுவப்பேச்சாளர் கூறியவை வருமாறு:-

மன்னார் பகுதிக்கும் கொடி கட்டிய ஆற்றுப் பகுதிக்கும் இடையூடாக கடும் பிறகளச் சூட்டாதரவுடனும் விமானப் படையினரின் ஹெலிக்கொப்டர் தாக்குதல் உதவியுடனும் நேற்றுமுன்தினம் காலை 6 மணியளவில் படைத்தரப்பினர் முன்னேற முயன்றனர். இம் முன்னேற்ற முயற்சிக்கு எதிராகப் புலிகள் மேற்கொண்ட முறியடிப்புச் சமரில் படைத்தரப்பினர் பாரிய இழப்புகளுடன் தமது பழைய நிலைகளுக்குத் திரும்பிச் சென்றனர்.

இச் சமரின் பின்னர் படையினரின் இரு சடலங்களையும் அவர்கள் விட்டுச் சென்ற வெடிபொருள்களையும் புலிகள் மீட்டனர் - என்று அவர்மேலும் கூறினார்.

இச்சமர் தொடர்பாக படைத்தரப்பு தெரிவித்தவை வருமாறு:-

வவுனியா - மன்னார் இடைப்பட்ட பெரியமடு முன்னரங்க நிலைகளில் இருந்து மேற்கே உள்ள விடுதலைப் புலிகளின் பகுதியை நோக்கி நேற்றுமுன்தினம் ஹெலிக்கொப்டர்களின் தாக்குதல் உதவியுடன் படையினர் மேற்கொண்ட நடவடிக்கையில் விடுதலைப் புலிகளின் 9 பதுங்கு குழிகள் அழிக்கப்பட்டன. விடுதலைப் புலிகளில் 17 பேர் உயிரிழந்தனர். 25 பேர் காயமடைந்தனர். படைத்தரப்பில் இருவர் உயிரிழந்தனர். இருவர் காணாமற்போயினர். மேலும் 10 பேர் படுகாயமடைந்தனர் - என்று தெரிவிக்கப் பட்டது. (சி)

## ஓமந்தைச் சாவடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான அத்தியாவசிய உணவுப் பொருள்கள் விநியோகச் செயற்பாடுகளும் பாதிக்கப்பட்டுள்ளன என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அவசர வேலைகளுக்காக வன்னிப் பிரதேசத்தின் பல பகுதிகளிலும் இருந்து சில தினங்களுக்கு முன்னர் வவுனியா நகரப்பகுதிக்கு வந்தவர்களும் கடமையின் நிமித்தம் வந்தவர்களுமே இவ்வாறு திரும்பிச் செல்ல முடியாமல் இங்கேயே தங்கியிருக்க நேர்ந்துள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பலர் தமக்குத் தெரிந்தவர்கள் மற்றும் உறவினர்கள் நண்பர்களது வீடுகளில் தங்கியிருக்கின்ற அதேவேளை, பலர் இங்குள்ள விடுதிகளில் தங்கியிருக்கின்றார்கள். இவ்வாறு விடுதியில் தங்கியுள்ளவர்கள் தமது கையில் இருந்த பணம் தீர்ந்துவிட்டது எனவும் தமக்கு சாப்பிடுவதற்கு வழியில்லாத நிலை உருவாகியிருக்கின்றது எனவும் நேற்று வவுனியா செயலகத்திற்குச் சென்று அரச அதிகாரிகளிடம் முறையிட்டனர்.

இதனையடுத்து, ஒவ்வர் (OFFER) என்ற தொண்டு நிறுவனத்தின் உதவியோடு விடுதிகளில் தங்கியிருப்போருக்கு உணவு வழங்கப்பட்டு வருகின்றது என வவுனியா மாவட்ட புனர்வாழ்வுப் பணிப்பாளர் திருமதி கேதீஸ்வரன் தெரிவித்தார். இந்த ஏற்பாட்டையடுத்து தமக்கு நேற்றுப் பகல் முதல் உணவு வழங்கப்பட்டது என விடுதிகளில் தங்கியுள்ளவன்னிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர். (அ-சி)

## அன்ரனி என்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரித்தானிய அரசு, கருணாவுக்கு வேறு ஒருபெயரில் கடவுச்சீட்டை வழங்கி அவரை இங்கு கொண்டுவந்து விட்டதுடன் இலங்கை அரசை முட்டாளாக்கியுள்ளது.

அன்ரனி என்ற பெயரில் உருவாக்கிய கடவுச்சீட்டைப் பயன்படுத்தியே கருணாவைப் பிரித்தானியா இலங்கைக்கு நாடு கடத்தியுள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சு இன்று போலிக் கடவுச்சீட்டுக்களை வழங்கும் முகவர் நிலையம் போன்று மாறிவிட்டது - என்றார் அவர். (சி)

## கரும்புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் முப்படையினர் கடும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும்-

தெற்கிலும் தலைநகர் கொழும்பு உட்பட்ட பல பகுதிகளிலும் பாதுகாப்புப் படையினர் உஷார்ப்படுத்தப் பட்டிருக்கின்றனர் என்றும்- தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை கரும்புலி தினத்தையொட்டி வன்னிப்பிரதேசத்தில் சிவப்பு, மஞ்சள் கொடிகள் பறக்கவிடப்பட்டு, ஆங்காங்கே கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று வன்னித்தகவல்கள் தெரிவிக்கின்றன. (சி)

## வடக்கு-கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கெடுவிதிக்கின்றார்.

இவ்வாறு காலம் இழுத்தடிக்கப்படுவதால் மக்களின் பணம் வீணடிக்கப்படுகிறது. உயரிழப்புகள் ஏற்படுகின்றன. படையினர் உளவியல் ரீதியாகப் பின்னடைவு காண்கின்றனர்.

எவ்வளவு காலம் யுத்தம் செய்தாலும் இறுதியில் அரசியல் தீர்வு ஒன்றின் ஊடாகத்தான் இந்தப் பிரச்சினையைத் தீர்க்கமுடியும்.

**யுத்தம் பற்றி அறிய மக்களுக்கு உரிமையுண்டு**

யுத்தத்திற்கு மக்களின் பணம் செலவிடப்படுவதால் யுத்தம் தொடர்பான உண்மை நிலையை அறிவதற்கு மக்களுக்கு உரிமை உண்டு.

ஆனால், அந்த உண்மையை ஊடகவியலாளர்கள் மக்களுக்குத் தெரியப் படுத்தினால் அவர்கள் தாக்கப்படுகின்றனர். 'தேசத்துரோகிகள்' என்று முத்திரை குத்தப்படுகின்றனர்.

யுத்தம் நிறுத்தப்பட்டு அரசியல் தீர்வின் ஊடாகவே இலங்கைப் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்று பல நாடுகள் கூறுகின்றன. இந்தியாவும் அதே நிலைப்பாட்டைத்தான் கொண்டுள்ளது.

கடந்த மாதம் இந்திய உயர்மட்டத்தின் மூவர் கொழும்பு வந்து ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

வடக்கு - கிழக்கு மீள இணைக்கப்பட்டு, 13ஆவது திருத்தத்துக்கும் அப்பால் தீர்வு முன்வைக்கப்படவேண்டும் என்று அவர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அழுத்தம் கொடுத்துள்ளனர்.

இந்தியாவின் இந்த அழுத்தம் தொடர்பாக இலங்கை அரசின் நிலைப்பாடு என்னவென்பதை அரசு இந்நாட்டு மக்களுக்குத் தெரிவிக்கவேண்டும் - என்றார். (அ-சி)

## யாழ்.ஆஸ்பத்திரிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மின்சார சபையின் யாழ்.பிராந்திய அலுவலகம் மேற்கண்டவாறு அறிவித்துள்ளது.

எனினும்-

அந்தப் பிரதேசத்தில் காலை ஒரு மணி நேரமும் மாலை ஒரு மணி நேரமும் மின்தடை நடைமுறைப்படுத்தப்படும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## பாக்.ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரது அறிவிப்பின்படி இந்த மாநாட்டில் பாகிஸ்தான் சார்பில் அதன் ஜனாதிபதி முஷாரப் பங்குபற்றமாட்டார் என்பது தெளிவாகியுள்ளது.

பிரதம மந்திரி யூசுப் கிலானி கொழும்பில் ஓகஸ்ட் 2ஆம், 3ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள சார்க் உச்சி மாநாட்டில் கலந்துகொள்ளும் குழுவிற்குத் தலைமை தாங்கி அங்கு செல்லவுள்ள அதேவேளை ஜூலை 31ஆம் திகதி நடைபெறவுள்ள அமைச் சர்கள் மட்ட மாநாட்டிற்கு வெளிவிவகார அமைச்சர் தலைமையிலான குழு செல்லும் என்றும் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை பாகிஸ்தானிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம வுடனான சந்திப்பின் போது, சார்க் நாடுகள் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கான ஒத்துழைப்பை வலுப்படுத்த வேண்டுமென பாகிஸ்தான் ஜனாதிபதி பேர்வஷ் முஷாரப் குறிப்பிட்டுள்ளார்.

சார்க் நாடுகள் தாம் எதிர்கொள்ளும் சவால்களுக்குத் தீர்வு காண்பதற்காக கூட்டுத் தந்திரோபாயமொன்றை வகுக்க வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

உலகம் எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவால் பயங்கரவாதம் எனத் தெரிவித்துள்ள முஷாரப், இதற்கு முடிவு காணாமல் பொருளாதார ஸ்திரத்தன்மை சாத்தியமில்லை என்றும் தெரிவித்துள்ளார். (உ)

## யாழ்.பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கப்பட்டுள்ளதாகவும் அவற்றை மாணவர்கள் உரியவாறு பூர்த்தி செய்து எதிர்வரும் செவ்வாய்க்கிழமை எடுத்து வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

விவசாயத்துறைக்கு 75 பேரும், நுண்கலைத் துறைக்கு 23 பேரும், மருத்துவத் துறைக்கு 49 பேரும் , உடற்கல்வி விஞ்ஞானத்துறைக்கு 139 பேரும், மருந் தாளர் கற்கைநெறிக்கு 14 பேரும், தாதியர் கற்கை நெறிக்கு 14 பேரும், சங்கீதத்திற்கு 68 பேரும், மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானத்திற்கு 7 பேரும், மருத்துவத்துறைக்கு 100 பேரும், சட்டத்துறைக்கு 50 பேரும், நடனத்துறைக்கு 50 பேரும், கணனி விஞ்ஞானத்துறைக்கு 21 பேரும், வர்த்தகத் துறைக்கு 121 பேரும், உயிரியல் விஞ்ஞானத்துறைக்கு 87 பேரும் , முகாமைத்துவத்துறைக்கு 140 பேரும், கலைத் துறைக்கு 236 பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (அ-50)


**தொழிற் பயிற்சிகள்**

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தொழில் வாய்ப்பு பெறக்கூடிய முறையில் முழுநேர செய்முறைப் பயிற்சிகளுடன் பயிற்சியளிக்கப்படும்.

**Mobile Phone Repairing**
Hard Ware — Hard Ware Repairing
Soft Ware — Phone Lock
*காலம்:- 1 மாதம்*

**Diploma in Hard Ware Engineering**
*காலம்:- 3 மாதங்கள்*

* **ரேடியோ, ரெலிவிசன், வீடியோடெக் றிப்பியறிங்**
சகல இன ரேடியோக்கள், ரெலிவிசன், வீடியோடெக், CD, Amp திருத்துதல் பயிற்சியளிக்கப்படும். *காலம்:- 9 மாதங்கள்*

* **ஏயர் கொண்டிசனிங்**
சகல குளிர்தசாதனப் பெட்டிகள், ஏயர் கொண்டிசன்கள் திருத்தும் முறைகள் பயிற்சியளிக்கப்படும். *காலம்:- 6 மாதங்கள்*

* **எலக்ரிக்கல் வயறிங், றிவைண்டிங்,**
வீட்டு மின் வேலை, மோட்டார், Fan, Transformer வைண்டிங் செய்யப்படும் முறை பயிற்சியளிக்கப்படும். *காலம்:- 6 மாதங்கள்*

ஆரம்பம்:- 06/07/2008 ஞாயிறு
07/07/2008 திங்கள்

**JAFFNA TECHNICAL INSTITUTE**
இல. 45, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 0212226434, 0779254078
(அ/553554)

**TITA**
**Rural IT Training Centre**
140 Navalar Road, Jaffna — 140 நாவலர் வீதி யாழ்ப்பாணம்

சேவை நோக்குடன் மிகக் குறைந்த கட்டணத்தில் இலண்டன் ஸ்ரீகனக துர்க்கை அம்மன் ஆலய அனுசரணையுடன் இயங்கிவரும் பயிற்சி நிலையத்தில்,

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

Basic Computer Application
Desktop Publishing
Inter net & e-mail
*Online Classes*

**Certificate Courses**
❖ Ms Word XP ❖ Ms Excel XP
❖ Ms Powerpoint XP ❖ Ms Access XP
❖ Adobe Photoshop ❖ Adobe PageMaker
❖ CorelDRAW

புதிய பிரிவுகள் ஒவ்வொரு வாரமும் ஆரம்பம்
மேலதிக விபரங்களுக்கு நேரில்

அரசியல்
திரு.தனபாலன்
A/L 08 தமிழ்மொழி
ஆரம்பம்: 5.7.2008 சனி 11a.m.
A/L09,10 புதிய பிரிவு
ஆரம்பம்:- 5.7.2008 சனி 12p.m.
நூலிவேர்சல்
யாழ்.இந்து மகளிர் கல்லூரி அருகில்

**BITSMANS**
கல்விநிறுவனம் மானிப்பாய்
A/L 2009/2010
இரசாயனம்
N.மகேஸ்வரன்
SAT., SUN. 3.30 INORGANIC
SAT., SUN. 4.30 ORGANIC
ஆரம்பம்:- 06.07.2008 SUN 3.30





இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.07.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org